V. இனிய தமிழில் மொழிபெயர்க்க. (14)

23. Gandhiji loved and respected truth more than anything else. He fought his whole life to uphold the value of truth. From his experiment with truth, he came to know that there could be no God other than truth. He taught us that our thought, word and deed should be one. He preached what he practised.

---





# தமிழ் — தாள் II

Time : Three hours Maximum : 100 marks

I. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகளில் விடை தருக. (10 × 3 = 30)

1. சோழன் வரி வசூல் செய்த முறை, பட்டினப்பாலையில் எவ்வாறு கூறப்பெற்றுள்ளது?

2. காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் ஓய்வு நேரத்தை எவ்வாறு கழித்தனர்?

3. எங்கராயன் கலிங்கனுக்குக் கூறிய அறிவுரைகளைத் தெளிவிக்க.

4. தனிப்பாடல்களின் சிறப்புக்கள் யாவை?

5. கல்வெட்டுக்கள் உணர்த்தும் பழக்கவழக்கங்களைப் புலப்படுத்துக.

6. அதியமான் நெல்லிக்கனியைப் பெற்றதும் என்ன எண்ணினான்?

7. நீலமணி மிடற்றன் யார்? விளக்குக.

8. யான் வாழும் நாளும் வாழ்க – விளக்கம் தருக.

9. குடிலன் பாத்திரப்படைப்பு வழி ஆசிரியர் உணர்த்தும் உண்மைகளைத் தெளிவிக்க.

10. பாரதிதாசனாரின் இளமைப்பருவம் குறித்து எழுதுக.

11. கோவலனின் கலை உள்ளத்தை எடுத்துரைக்க.

12. ஏமாங்கத நாட்டுச் செல்வச் சிறப்பினைப் புலப்படுத்துக.

13. ஏமாங்கத நாட்டு மக்களின் இயல்புகளைத் தெளிவிக்க.

14. கவிதையை அனுபவிக்கும் முறையை எழுதுக.

15. பெருங்கவினனுக்குரிய இலக்கணம் யாது?

II. எவையேனும் <u>மூன்று</u> குறித்துப் <u>பத்து</u> வரிகளில் விடை தருக. (3 × 6 = 18)

16. பாரதி ஒரு தீர்க்கதரிசி என்பதை விவரிக்க.

17. தமிழ்க்கவிதை பற்றிய அ.ச.ஞா. அவர்களின் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

18. திருத்தக்க தேவரின் கற்பனை ஆற்றலைப் புலப்படுத்துக.

19. பாரதிதாசனின் தமிழ்ப் பற்றினை மதிப்பிடுக.

20. காவிரிப் புகும் பட்டினம் பற்றி அறியப் பெறும் கருத்துக்களை ஆராய்க.



III. எவையேனும் <u>இரண்டு</u> பற்றி <u>ஒருபக்கத்திற்கு</u> மிகாமல் விடை தருக. (2 × 12 = 24)

21. (அ) குறட்டை ஒலி

(ஆ) கடமை

(இ) சித்த வைத்தியர்

(ஈ) சுதந்திரப் பறவை.

IV. பின்வரும் பாடலில் அமைந்துள்ள சொல், பொருள், தொடை, சந்தம் முதலியனவற்றுள் ஏற்புடை நயங்களை விளக்குக. (14)

22. "நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்
கோலமுழுதும் காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்த தனிப்பூவோ நீதான்!
சொக்க வெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ!
காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!